# ரணில், மஹிந்தவுடன் சஜித் கூட்டணியா?

கொழும்பு, மார்ச் 24

"சஜித், மஹிந்த, ரணில் இணையவுள்ளனர் என்று பல்வேறு பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அது மாத்திரமல்லாது அவ்வாறு செய்தி வெளியிட்டு தொலைக்காட்சி அலைவரிசைகளில் காலையில் பத்திரிகை முக்கிய செய்தி வாசிப்பு நிகழ்ச்சிகளில் தலைப்புச்செய்திகளாக முன்னிலைப்படுத்தப் படுகின்றன. இது அப்பட்டமான பொய்யாகும்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"ஐக்கிய மக்கள் சக்திக்கு யாருடனும் சேர வேண்டிய தேவை இல்லை. இவ்வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய 2



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 10 திங்கட்கிழமை 24.03.2025 கதிர் 160




# உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் அநுர அரசின் ஆட்டம் முடிவுக்கு!

## அடித்துக் கூறுகின்றார் முஜிபுர் ரஹ்மான் எம்.பி.



கொழும்பு, மார்ச் 24

உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் இந்த அரசின் ஆட்டம் முடிவுக்கு வரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாம் சாதாரணமாகக் கருதவில்லை. சவாலாகவே கருதுகின்றோம். எனவே, கடந்த தேர்தல்களை விட எவ்வாறு இம்முறை தேர்தலில் வாக்குகளை அதிகரித்துக் கொள்வது என்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம் கொழும்பில் 2

## மேர்வின் சில்வா உட்பட மூவரின் மறியல் நீடிப்பு



கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட மூவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் 2

## 21 மில்லியன் ரூபா மோசடி: உதய கம்மன்பில விடுதலை

கொழும்பு, மார்ச் 24

போலி ஆவணம் தயாரித்து ஆஸ்திரேலிய பிரஜை ஒருவருக்குச் சொந்தமான பங்குகளை விற்பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோரைக் குறித்த குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நீண்ட காலமாகத் தொடரப்பட்ட இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிவான் நாமல் பண்டார பலல்லே முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 முதல் 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் போலி ஆவணம் தயாரித்து ஆஸ்திரேலியப் பிரஜை ஒருவருக்குச் சொந்தமான பங்குகளை விற்பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடி செய்தார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில



மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 2

### யாழில் ஆசிரியரைத் தாக்கிய

## நிதி நிறுவன முகாமையாளரின் தாயாரும் சகோதரிகளும் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 24

தனியார் நிதி நிறுவனத்தின் முகாமையாளர் ஒருவர் அயல் வீட்டில் உள்ள ஆசிரியரை மண்வெட்டியால் 2



## வத்தளையில் ஆணின் சடலம் மீட்பு!



கொழும்பு, மார்ச் 24

வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அவரகொட்டுவ பிரதேசத்தில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

45 வயது மதிக்கத்தக்க 5 அடி 7 அங்குலம் உயரமுடைய நபரே நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 2

## மேர்வின் சில்வா....

வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேகநபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, சந்தேகநபர்களான மேர்வின் சில்வா உட்பட மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணில், மஹிந்தவுடன் ....

மக்கள் சக்தி பெரும் வெற்றியடைவதைத் தடுக்க, வங்குரோத்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றன." - என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த அரசு செய்ததையே மீண்டும் செய்வது முறைமை மாற்றமல்ல. மக்களை ஏமாற்ற ஐக்கிய மக்கள் சக்தி அச்சப்படுகின்றது. பொய்யை நம்ப வைப்பதற்கும், மக்களை அரசியல் ரீதியாக ஏமாறுவதற்கும் நாம் பயப்படுகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியானது முடிவுகளை எடுக்கும் விடயத்தில் சரியான முடிவுகளையே எடுத்து வருகின்றது.

இன்று அரசானது பல்வேறு தலைப்புச் செய்திகளை தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு கட்சிகளுடன் கூட்டு சேர முயற்சிக்கின்றது எனப் போலியான செய்திகளைக் கட்டமைத்து வருகின்றது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அத்தகையதொரு தீர்மானத்துக்கு வராது. நாம் இவர்களோடு இணையோம்.

ஐக்கிய மக்கள் சக்தி முதன்முறையாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதாலயே இவ்வாறான செய்திகளை வெளியிடுகின்றார்கள்." - என்றார்.

## வத்தளையில்....

சடலமானது ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 21 மில்லியன் ....

இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோருக்கு எதிராக போதுமான சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர்களை வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிதி நிறுவன .....

தாக்கிய நிலையில் பாதிக்கப்பட்ட நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அச்சுவேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணையின்போது, தாக்குதலை மேற்கொண்ட முகாமையாளருக்குத் துணைபோன தாயார் மற்றும் இரண்டு சகோதரிகள் இன்று திங்கட்கிழமை அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இருப்பினும் தாக்குதலை நடத்தியவர் ஆஜராகவில்லை என்பதுடன் அச்சுவேலி பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி.....

வெற்றி பெற்றோம். எனினும், பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தோம். எனவேதான் இந்தத் தேர்தல் எமக்குச் சவாலானது என்பதை உணர்ந்து கொண்டுள்ளோம். எனினும், தற்போது தேர்தல் நிறைவடைந்து 6 மாதங்கள் கடந்துள்ளன.

அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமையால் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தச் சவாலை எம்மால் வெற்றி கொள்ள முடியும் என்று நம்புகின்றோம். வைத்தியர் ருவைஸ் அனீபா தலைமையில் சிறந்த குழுவொன்றை கொழும்பில் களமிறக்கியிருக்கின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய போது கொழும்பில் அதிகளவான வாக்குகளைப் பெற்றிருந்தார். பொதுத் தேர்தலில் அவரது ஆதரவாளர்கள் வாக்களிப்பை புறக்கணித்திருந்தனர். எனவே, இம்முறை தேர்தலில் அந்த வாக்குகளை எவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் ஈர்ப்பது என்பது குறித்து அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டத்துக்கான பட்டியல் எமக்கு எந்த வகையில் சவாலானதல்ல. அவ்வாறன்றி ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் எம்முடன் இணைந்து செயற்படுவர். எனவே, ஐ.தே.க. தனித்துக் களமிறங்குவதால் எமக்கு எவ்வித சிக்கலும் இல்லை.

தற்போது அரசுக்கு மக்கள் செல்வாக்கு குறைவடைந்து செல்கின் றது. எனவேதான் அது முழுமையாக வீழ்ச்சியடைய முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் அரசு மும்முரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது." - என்றார்.

# வெடிமருந்து, துப்பாக்கியுடன் இளைஞர்கள் இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 24

வெடிமருந்து மற்றும் துப்பாக்கியுடன் இளைஞர்கள் இருவர் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, பொரளை பொலிஸ் பிரிவின் ஓவல் மைதானத்துக்கு அருகில் வெடிமருந்துகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் வெடிமருந்தும் மற்றும் எல்.எம்.ஜி. வெடிமருந்தும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கோமரன்கடவல, கஜ/வத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரி - 56 ரக துப்பாக்கியை வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# வவுனியாவில் காசநோயால் 9 பேர் மரணம்

வவுனியா, மார்ச் 24

காசநோயால் வவுனியாவில் கடந்த வருடம் 9 பேர் இறந்துள்ளதுடன் 56 பேர் நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு பிரிவின் வைத்திய பொறுப்பதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இம்முறை ‘ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்’ எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரை ஒரு இலட்சம் பேரில் 62 பேர் காசநோயாளர்களாக அடையாளம் காணப்பட வேண்டும். ஆனால், கடந்த வருடம் 8 ஆயிரம் பேரே நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். விகிதாசாரத்தின்படி அதன் எண்ணிக்கை 14 ஆயிரமாக இருக்க வேண்டும்.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 56 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதில் 9 பேர் உயிர் இழந்துள்ளனர். அவர்கள் நோய் வந்து உரிய நேரத்தில் சிகிச்சைக்கு வராமல் காலதாமதமாக வந்தமையால் அந்த மரணம் ஏற்பட்டது.

குறிப்பாக தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் என இப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொது வைத்தியசாலைகளுக்குச் சென்று சாதாரண சளிப் பரிசோதனையை இலவசமாகச் செய்து கொள்வதன் மூலம் இந்த நோயை அடையாளம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய்க் கிருமி தங்கக்கூடும்.



அப்படியானவர்களுக்குப் பரிசோதனையைச் செய்வதன் மூலம் அதனைக் கண்டறியலாம்.

ஒருவருக்குக் காசநோய் ஏற்பட்டால் ஆறு மாதத்துக்கு நேரடி கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளைப் பெற்றுக்கொண்டால் அதனை முற்றாகக் குணப்படுத்தலாம். அதற்கான மருந்து உள்ளது. அது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத் தவறினால் அது தீவிரமடைந்து இறப்புக்கு வழிவகுக்கும்.” - என்றார்.

## மூன்று புதிய வெளிநாட்டுத் தூதுவர்கள் அநுரவிடம் நற்சான்றிதழ் கையளிப்பு

கொழும்பு, மார்ச் 24

இலங்கைக்காகப் புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று வெளிநாட்டுத் தூதுவர்கள் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தங்கள் நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்தனர்.

பிரான்ஸ், பலஸ்தீன் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, பிரான்ஸ் தூதுவராக ரெமி லம்பேர்ட்டும், பலஸ்தீன தூதுவராக இஹாப் ஐ.எம். கலீலும், நேபாள தூதுவராக கலாநிதி பூர்ண பகதூர் நேபாளியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை





அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில் காசநோய் விழிப்புணர்வு ஊர்வலம்

வவுனியா, மார்ச் 24

வவுனியாவில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இன்று இடம்பெற்றது.

வவுனியா வைத்தியசாலை உள்வட்ட வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் ஆரம்பித்த விழிப்புணர்வு ஊர்வலம், யாழ். வீதியை அடைந்து வைத்தியசாலை சுற்று வட்ட வீதி ஊடாக கண்டி வீதியால் சென்று மணிக்கூட்டுக் கோபுர சந்தி ஊடாக பசார் வீதியை அடைந்து ஹொரவப்பொத்தானை வீதி ஊடாக வைத்தியசாலையைச் சென்றடைந்தது.

இதன்போது காசநோயைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. இதில் வைத்தியர்கள்,






தாதியர்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டோக்கள் கலந்துகொண்டன.



# பால் நினைந்தூட்டும்...

தாய்ப்பால், 'திரவத் தங்கம்' என்று அழைக்கப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் முதலில் தாய்க்குச் சுரக்கும் சீம்பால் (Colostrum) என்பது நோய் எதிர்ப்பு சக்திகள் தரக்கூடிய எதிரணுக்கள் நிறைந்தது. உலகைச் சந்திக்கும் குழந்தைக்கான முதல் கவசம் அது. வளரும் குழந்தைக்குத் தேவையான ஊட்டச்சத்துகள், எதிரணுக்கள், ஏன் போதுமான நீர்ச்சத்து வரை தாய்ப்பாலிலேயே கிடைக்கிறது என்று குழந்தை மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மனிதர்கள் உட்பட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இனங்கள் கொண்ட 'பாலூட்டிகள்' வகுப்பில் உள்ள எல்லா விலங்குகளுமே குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் தன்மை கொண்டவை. ஆனால், குட்டிகளுக்குப் பால் தருவது என்பது பாலூட்டிகளுக்கு மட்டுமேயான தனி குணம் அல்ல. பரிணாம அடுக்கில் கீழே இருக்கும் சில விலங்குகளிலும் இந்தப் பண்பு காணப்படுகிறது! சிலவகை பறவைகள், முதுகெலும்பில்லாத பிற உயிரிகள், இவ்வளவு ஏன், மீன்களிலும் பூச்சிகளிலும்கூட இந்தப் பண்பு உண்டு!

புறாக்கள், பென்குயின்கள், செங்கால் நாரைகள்ஃ பூநாரைகள் (Flamingo) போன்ற சில பறவை இனங்கள், குஞ்சுகளுக்குப் பாலூட்டுகின்றன. இந்த பால் ஊசழி அடைம என்று அழைக்கப்படுகிறது. குஞ்சுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் நிரம்பிய ஒரு வெள்ளை நிறத் திரவம். இது தாய் அல்லது தந்தைப் பறவைகளின் வாயிலிருந்து குஞ்சுகளுக்கு நேரடியாகத் தரப்படுகிறது. செங்கால் நாரைகளின் பாலில் காந்தாசாந்தின் என்ற ஒரு பொருள் இருப்பதால், அது ரத்தச்சிவப்பு நிறத்தில் இருக்கும்! குஞ்சுகளுக்கு ஊட்டச்சத்துகளோடு அழகான சிவந்த நிறத்தையும் தரும் உத்தி இது. இதனால் குஞ்சுகளுக்குப் பாலூட்டும் காலத்தில் தாய்ப்பறவைகள் தங்கள் நிறத்தை இழந்து வெளிறிப்போய்விடுகின்றன. பாலின் நிறத்தை மட்டும் வைத்துப் பார்த்தால் 'ரத்தத்தையே பாலா கொடுத்தேன்' என்பது போன்ற வசனங்கள் இந்தப் பூநாரைகளுக்குத்தான் பொருந்தும்!

அமேசான் நதியில் வசிக்கும் டிஸ்கஸ் என்ற வகை மீன்களைப் பொறுத்தவரை, முட்டை குஞ்சு பொரிந்ததும் உடலின் மேல் தோலில் இருந்து பிசுபிசுப்பான பால் போன்ற திரவம் ஒன்று சுரக்கும். இது குஞ்சுகள் வளரும்போது 3 வாரம் வரை குஞ்சுகளுக்குப் புகட்டப்படும். பிறந்த குஞ்சுகளின் வயிற்றில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் எதுவும் இருக்காது என்பதால், இந்தப் பாலின்மூலம் அவை குஞ்சுகளின் உடலுக்குள் சேர்க்கப்படுகின்றன.

உறங்கிக்கொண்டேயிருக்கும் நோய் (African sleeping sickness) தொற்றைப் பரப்பக்கூடிய தெத்சி ஈக்கள் (வுளநவளந கடல), குட்டி போடும் பண்பு கொண்டவை! இவற்றின் உடலுக்குள் கருப்பையில் லார்வா புழு வளரும்போதே பால் சுரக்கத் தொடங்கிவிடும். கருப்பைக்குள்ளிருந்தே இவை பாலூட்டுகின்றன. லார்வா வளர வளர, அதன் வளர்ச்சி நிலைக்கு ஏற்றவாறு பாலின் தன்மையும் மாறிக்கொண்டே இருக்கும்! Diploptera punctata என்ற ஒரு வகை கரப்பான்பூச்சி இனமும் குட்டிகளை ஈன்று பால் தரும் பண்பு கொண்டது.

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில விலங்குகள் அடுத்த தலைமுறைக்குப் பாலூட்டினாலும், பால் ஊட்டுவதற்கான சரியான உடல் அமைப்பு, பால் சுரப்பிகள், குட்டிகளிடம் பாலை சென்று சேர்ப்பதற்கான உறுப்புகள், சூழலுக்குத் தகுந்தவாறு இருக்கும் பாலின் தன்மை என்று எல்லாமே சரியாக அமைந்திருப்பது பாலூட்டிகளில்தான். 31 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சினாப்சிட் என்ற விலங்கில்தான் இந்தப் பண்பு சரியாகத் தோன்ற ஆரம்பித்தது என்று விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள். அதில் தொடங்கிய பரிணாம வளர்ச்சி, மிகவும் நுணுக்கமான தேவைகளுக்கு ஏற்றவாறு தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்க்கிறது.

மாடுகளிலேயே பசும்பாலுக்கும் எருமைப்பாலுக்கும் வேறுபாடு உண்டு என்று நாம் அறிவோம். குட்டிகளின் வளர்ச்சி வேகம், சுற்றியுள்ள சூழலின் வெப்பநிலை, வேட்டையாடிகளின் ஆபத்து என்று எல்லாவற்றுக்கும் ஈடு கொடுப்பதாக விலங்குகளின் பால் இருக்கிறது. சில அதீத உதாரணங்களைப் பார்க்கலாம்.

பசும்பாலில் 3-4% கொழுப்புச் சத்து உண்டு. அதோடு ஒப்பிட்டால் ஹுடட் சீல் (Hooded seal) என்ற கடல் பாலூட்டியின் பால் கிட்டத்தட்ட ஐஸ்கிரீமைப் போன்றது. இந்த விலங்கு தரும் பாலின் கொழுப்பு அளவு 61 சதவீதத்தையும் தாண்டும்! ஒரு நாளைக்கு ஒரு சீல் குட்டி 7 லிட்டருக்கு மேல் பாலைக் குடிக்கிறது! தொடர்ந்து பால் குடிக்கும் குட்டியின் எடை 22 கிலோ கூடுவதால், நான்கே நாட்களில் எடை இரட்டிப்பாகிவிடுகிறது! அடுத்த இரண்டு மூன்று நாட்களிலேயே திட உணவு உண்ணத் தயாராகும் குட்டி, தாயிடம் பால் குடிப்பதையும் நான்கு நாட்களில் நிறுத்திவிடுகிறது.

**கொழுப்புச்சத்து நிறைந்த இந்த ஐஸ்கிரீம் பாலின் தேவை என்ன?**

ஹுடட் சீல் வகை பாலூட்டிகள், பனிப்பிரதேசமான ஆர்டிக் கடற்பகுதிகளில் பனித்தகடுகள்மேல் வசிக்கின்றன. இங்கு உள்ள உறையவைக்கும் வெப்பநிலையில் தாக்குப் பிடிக்கவேண்டுமானால், குட்டிகளின் உடலில் ஒரு கொழுப்புப் படலம் இருக்கவேண்டியது அவசியம். தவிர, பனித்தகடுகள் உடைந்துவிட்டால், குட்டிகளும் தாயும் பிரியும் ஆபத்தும் அதிகம். ஆகவே, நான்கே நாட்களில், வாழ்நாளுக்குத் தேவையான மொத்த கொழுப்பையும் ஊட்டச்சத்தையும் தாய்விலங்கு தந்துவிடுகிறது.

கறுப்பு காண்டாமிருகங்கள் உலகிலேயே மிகக்குறைந்த அளவில் கொழுப்புச்சத்துக் கொண்ட பாலைச் சுரக்கின்றன. பாலில் உள்ள கொழுப்புச்சத்து ஒரு சதவீதத்துக்கும் குறைவு – 0.21% மட்டுமே! இவற்றின் இனப்பெருக்கச் சுழற்சி மிகவும் மெதுவானது என்பதால், குட்டிகளைப் பொறுமையாக வளர்த்தால் போதுமானது. ஆகவே குறைந்த கொழுப்புச்சத்து இருக்கும் பால் இருந்தாலே குட்டிகள் வளர்ந்துவிடுகின்றன. வளர்ச்சி விகிதம் குறைவாகவும், அதிக நாட்கள் பால் குடிப்பவையாகவும் குட்டிகள் இருக்கும்போது, அவற்றுக்குத் தேவையான கொழுப்பும் புரதமும் குறைவுதான் என்கிறது 2013இல் வெளிவந்த ஓர் ஆய்வு.

உலகிலேயே மிகவும் இனிப்பான பால் எந்த விலங்குடையது என்று விஞ்ஞானிகள் தேடிப் பார்த்தார்கள். 14% சர்க்கரை அளவோடு முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது டாமர் வாலபி என்ற ஒருவகை கங்காரு. ஆனால், மற்ற விலங்குகளில் இருப்பதுபோல் இதில் உள்ளது சுக்ரோஸ் வகை சர்க்கரை அல்ல. சில விநோதமான சாக்கரைடுகள் இந்தப் பாலில் காணப்படுகின்றன. இதற்கான காரணம் என்ன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்துவருகிறார்கள். வாலபிகளின் குட்டிகள் வயிற்றுப்பைக்குள் வளர்கின்றன என்பதால் கிருமித் தொற்று ஏற்படாமல் இருக்க இந்தப் பால் உதவலாம் என்று சொல்லப்படுகிறது.

Eastern Cottontail Rabbit என்ற முயல் இனத்தின் பாலில் 15% புரதம் காணப்படுகிறது. இவை குட்டிகளைத் தனியே விட்டுவிட்டு உணவு தேடப் போகும் வழக்கம் கொண்டவை. ஒரு நாளைக்கு அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே குட்டிகளுக்குப் பாலூட்டுகின்றன என்பதால், அந்த நீண்ட இடைவெளியைச் சமாளிக்க இந்தப் புரதங்கள் உதவலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

குட்டியின் அளவு பெரிது என்றால், அது குடிக்கும் பாலின் அளவும் அதிகம்தானே!உலகின் மிகப்பெரிய விலங்கான நீலத்திமிங்கிலத்தின் பால் சுரப்பிகள் மிகப்பெரியவை. நீலத்திமிங்கிலத்தின் பாலில் 35 முதல் 50% வரை கொழுப்புதான். நீலத்திமிங்கிலத்தின் குட்டி ஒரு நாளைக்கு 200 லிட்டர் பால் குடிக்கிறது! ஆறு மாதம் வரை இவை பால் குடிக்கின்றன என்பதால், ஆறு மாதத்தில் ஒரு நீலத்திமிங்கிலக் குட்டி சராசரியாகக் குடித்த பாலின் ஆற்றல் என்பது, 200 பேர் ஓர் ஆண்டு முழுவதும் சாப்பிடுவதால் வரும் ஆற்றலுக்குச் சமம்! வளர்ந்துவரும் குட்டி தானாகவே திட உணவு தேடத் தொடங்கும்போது, கொஞ்சம் கொஞ்சமாகப் பாலில் உள்ள கொழுப்புச்சத்தும் குறைந்துவிடும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

திமிங்கிலங்களின் பால் என்று சொல்லும்போது நமக்கு ஒரு கேள்வி எழலாம் - தண்ணீருக்குள் இருக்கும் பாலூட்டிகள் எப்படிப் பால் தருகின்றன? பெரும்பாலும் பனித்தகடுகளின்மேல் நேரத்தைக் கழிக்கும் பாலூட்டிகளுக்குப் பிரச்சினையில்லை. ஆனால், தண்ணீருக்குள் இருக்கும் பாலூட்டிகளைப் பொறுத்தவரை, பால் என்பது நீரில் உடனே கரையாமல் இருக்கவேண்டும், ஆகவே அவை அதிகம் கொழுப்புச்சத்துள்ள பாலையே சுரக்கின்றன. சரியாகப் பால் குடிக்கும்வண்ணம் குட்டிகளுக்கு உதடு கிடையாது என்பதால், பாலைக் குட்டிகளின் வாய்க்குள் கொண்டு சேர்க்கும்விதமாகவே பெண்விலங்குகளின் பாலூட்டும் உறுப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன!

நீர்யானைகளின் கதை சற்றே விநோதமானது. இவை நீருக்குள் குட்டிகளை ஈனுகின்றன. குட்டியை ஈன்ற பிறகு தாய்விலங்கு குட்டியை நெட்டித் தள்ளி நீரின் மேற்பரப்பில் சுவாசிக்க வைக்கிறது. சுவாசித்து முடித்த பின்பு நீர்யானைக் குட்டிகள் தாங்களாகவே நீருக்குள் நீந்திப் போய் தாயிடம் பால் குடிக்கின்றன!

மனிதர்களின் தாய்ப்பாலோடு எல்லா விலங்குகளின் பாலையும் ஒப்பிட்ட விஞ்ஞானிகள், வேதியியல் கூறுகளை மட்டும் வைத்துப் பார்த்தால், மனிதர்களின் பாலும் வரிக்குதிரைகளின் பாலும் ஒரே தன்மையுடன் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த விலங்குகளின் பால் கூறுகள் ஒரே மாதிரியாக இருக்கும்



என்று நாம் நினைக்கலாம். ஆனால், மனிதர்களுக்கும் வரிக்குதிரைகளுக்கும் இடையில் 9.5 கோடி ஆண்டுகள் இடைவெளி உண்டு. அப்படியானால் இந்த ஒற்றுமை எப்படிச் சாத்தியமானது?

"குட்டிகளின் வளர்ச்சி, சூழல் எல்லாவற்றையும் பொறுத்துதான் பாலின் தன்மை அமையும். ஆகவே விலங்குகளின் பரிணாம இடைவெளியை மட்டும் கவனித்து இதை முடிவெடுக்க முடியாது" என்று விஞ்ஞானிகள் விளக்குகிறார்கள். தண்ணீர்ச்சத்து அதிகமாக இருக்கும் தாய்ப்பால், மனிதக் குழந்தையின் வளர்ச்சி விகிதத்துக்கு உதவுகிறது என்று தெரிவிக்கிறார்கள். வரிக்குதிரைக் குட்டிகளின் வளர்ச்சி விகிதம் வேறு என்றாலும், அவை இருக்கும் வறண்ட சூழலுக்குத் தகுந்தவாறு பாலின் தண்ணீர் விகிதம் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். சில விலங்குகளைப் பொறுத்தவரை, பிறந்த குட்டிகளின் மூளை வளர்வதைவிட உடல் வேகமாக வளர்ந்து வலுப்பெறுவது அவசியமாக இருக்கும். அப்போதுதான் வேட்டையாடிகளிடமிருந்து விரைவில் தப்பிக்க முடியும். மனிதர்களுக்கு அந்தப் பிரச்னை இல்லை. அதனால்தான், சராசரியான கால்நடைக் குட்டிகள்கூட மனிதக் குழந்தையைவிட நான்கு மடங்கு வேகமாக எடை கூடுகின்றன!

பரிணாம வளர்ச்சியில், பாலூட்டி விலங்குகளின் பாலூட்டும் உறுப்புகள், சுரப்பிகள், பால் உருவாகும் விதம் எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்த அதே நேரம், கருவுற்ற முட்டையின் மஞ்சள் கரு அளவில் குறையத் தொடங்கியது. முழுமையாக வளர்ச்சியடையாமலேயே குட்டிகள் வெளியில் வந்தால் போதுமானது என்ற நிலை ஏற்பட்டது. இது பேறுகாலத்தை மாற்றியமைத்தது. குட்டிகள் ஓரளவு வளர்ந்த பிறகு முழுமையான பல் அமைப்பு வந்தால் போதும் என்ற தளர்வும் கிடைத்ததால், தாடை எலும்புகள் வலுவடையாமல் குட்டிகள் பிறக்கத் தொடங்கின. வருங்காலத்தில் முளைக்கப் போகும் பற்களுக்கு அடையாளம் வைக்கும் விதமாகவும் உணவு உண்ண ஏதுவாகவும் பால் பற்களோடு குட்டிகள் பிறந்தன. பரிணாம வளர்ச்சியில் பாலூட்டும் பண்பும் இருவகை பற்கள் என்ற பண்பும் பின்னிப் பிணைவது இப்படித்தான்!

சிலவகை பாலூட்டிகளைத் தவிர எல்லாப் பாலூட்டிகளுக்கும் இருவகைப் பற்கள் உண்டு. சீல் போன்ற பாலூட்டிகளில், கருப்பைக்குள்ளேயே பால் பற்கள் உதிர்ந்து பெரிய பற்கள் முளைத்துவிடும். பல்லுள்ள திமிங்கில இனங்களுக்கு இருவகைப் பற்கள் என்ற பண்பு கிடையாது.

**விலங்குகள் தங்கள் குட்டிகளுக்கு மட்டும்தான் பால் கொடுக்குமா?**

சிங்கம் போன்ற பல சமூக விலங்குகளில், கூட்டத்தில் இருக்கும் குட்டிக்கு எந்தப் பெண் விலங்கு வேண்டுமானாலும் பால் தரும். கைவிடப்பட்ட திமிங்கிலக் குட்டிகளைத் தத்தெடுத்துப் பாலூட்டி வளர்க்கும் பெண் திமிங்கிலங்கள் உண்டு.

பாலூட்டிகளின் பரிணாம வளர்ச்சியில் தாய்விலங்குகள் குட்டிகளுக்குப் பாலூட்டுவது என்ற பண்பு ஒரு முக்கியமான பாய்ச்சலாகப் பார்க்கப்படுகிறது. தாயிடமிருந்து பால் குடிக்கும் குட்டிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியும் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளும் மூளை வளர்ச்சிக்கான வேதிப்பொருட்களும் ஊட்டச்சத்துகளும் போதுமான அளவில் சென்று சேர்ந்துவிடுகின்றன. குட்டிகளை ஈன்ற பின்பு அவற்றுக்குப் பாலூட்டவேண்டியிருப்பது தாய்விலங்குகளிடம் கூடுதல் ஆற்றலைக் கோருகிறது என்றாலும், இந்தப் பண்பு இருப்பதாலேயே குறைவான எண்ணிக்கையில் குட்டிகளை ஈன்றாலும் பாலூட்டிகளால் தங்கள் இனத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடிகிறது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2025 இல் வெளியிடப்பெற்றது